Praise the Lord: இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

இந்த உலகத்தில் மனிதர்களின் எண்ணங்களையும், வாழ்க்கையின் தன்மைகளையும் நாம் ஆழ்ந்து சிந்தித்தால் இது ஒரு பூரணமில்லாததும், நிறைவில்லாததும் என்பதை நன்றாக விளங்கிக் கொள்ளலாம்.

நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையையும் அவரது வார்த்தையையும் ஆழ்ந்து சிந்தித்தால் அது எவ்வளவு பரிபூரணமும் நிறைவுள்ளதும் என்பதும் விளங்கும்.

கிறிஸ்துவின் வெளிச்சத்திலே அவரை பின்பற்றி நடக்க பிரயாசப்படும் நமக்கு, கிறிஸ்து சொல்வது. . .

இந்த உலகம் என்னை உங்கள்முலமாக அறிந்துகொள்ள, அவர்களுக்கு முன்பாக உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக்கடவது என்று சொல்கிறார்.

இதை ஒரு கடினமான கட்டளை என்று சொல்வதா? நிர்பந்தமான சூழ்நிலை என்று சொல்வதா? நம்மாலே முடியாத காரியம் என்று சொல்வதா?

மனிதர்களின் எண்ணப்படி இது கூடாதகாரியமானாலும், தேவனாலே கூடும். அவர் நம்மோடு இருக்கும்போது கூடும். ஆமென்.

## let us pray. ..

*இயேசு கிறிஸ்து பிறந்தபொழுது. ..*

உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள். (லூக்கா 2:14)

Glory to God in the highest, and on earth peace, good will toward men. (KJV)

*கிறிஸ்து சிலுவையில் தம்மை ஒப்புக்கொடுப்பதற்கு முன்பாக ஒரு ஜெபத்தில். .பிதாவை நோக்கி . ..*

**பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன். நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியைகளைச் செய்து முடித்தேன். என்று சொல்லி ஜெபித்தார்.** (யோவான் 17: 4)

I have brought you glory on earth by completing the work you gave me to do. (NIV)

**தேவனின் பிரியத்தை கிறிஸ்து நிறைவாக செய்து முடித்தார். ஆமென்.**

சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று.

For God was pleased to have all his fullness dwell in him, and through him to reconcile to himself all things, whether things on earth or things in heaven, by making peace through his blood, shed on the cross. (NIV) (Colossians 1:19-20)

ஆதாம், தேவசாயலாக உருவாக்கப்பட்ட ஒருவன் மீறுதலினால் பாவம் உண்டானது. பாவத்தினால் மரணம் உண்டானது.

எல்லா மனுஷரும் பாவம் செய்தபடியால் மரணம் எல்லாருக்கும் வந்தது. ஆக்கினைத்தீர்ப்பு உண்டானது. பாவிகளாக்கப்பட்டோம்.

மனுஷசாயலாக வந்த தேவன் இயேசுகிறிஸ்து ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே, அநேகர் கிருபை பெற்றோம். குற்றங்களை நீக்கி நீதி விளங்க தீர்ப்பு உண்டானது. நீதிமான்களாக்கப்பட்டோம்.

**அவருடைய கிருபையின் பரிபூரணத்தையும் நீதியின் பரிபூரணத்தையும்** பெறுகிறவர்கள் நித்திய ஜீவனைப் பெறுகிறார்கள்.

*(இது நாம் வேதப்படிப்பிலே படித்தோம். May 2008)*

**அவருடைய கிருபையின் பரிபூரணத்தை பெறுகிறவர்களாக நாம் முன்னேறிச்செல்லும்போது, இந்த ஆலயத்தை சுற்றிலும் உள்ள மக்கள் நம்மோடு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இருக்கிறார் என்பதை நிச்சயமாக உணர்வார்கள். ஆமென்.**

ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் **உலகம் அறியும்படிக்கும்,** நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

I in them, and You in Me; that they may be made perfect in one, and that the world may know that You have sent Me, and have loved them as You have loved Me. (NKJV) (John 17:23)

(யோவான் 17வது அதிகாரத்தை மீண்டும் மீண்டுமாக வாசித்து தியானியுங்கள்.)

பிலிப்பியர் / Philippians 2:4-8 (பக்கம்: 271)

4. அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக.
5. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது;
6. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்,
7. தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்.
8. அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.

4 Each of you should look not only to your own interests, but also to the interests of others.
5 Your attitude should be the same as that of Christ Jesus:
6 Who, being in very nature[a] God, did not consider equality with God something to be grasped,
7 but made himself nothing, taking the very nature[b] of a servant, being made in human likeness.
8 And being found in appearance as a man, he humbled himself and became obedient to death—even death on a cross!

**மீண்டுமாக 7வது வசனம் மட்டும். . ..**

7. தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்.
..he gave up his divine privileges; (NLT) .. himself of no reputation, (KJV)
..stripped Himself [of all privileges and rightful dignity],(AMP) …of His own will he gave up all he had, (GNB)

**(இந்த 7வது வசனத்தை மீண்டும் மீண்டும் தியானித்துப் பாருங்கள். அவரது அளவிடமுடியாத கிருபை விளங்கும்.)**

> **எஜமானனுக்கு ஒருவர் அடிமை என்று சொன்னால், அந்த அடிமைக்கு என்றுள்ள எல்லா தனிப்பட்ட சொந்த விருப்பங்களை விட்டுவிட்டு எஜமானனின் விருப்பத்தையே சார்ந்துகொள்வதுதான் அடிமை.**

**என் சித்தம் அல்ல உம்சித்தமே நிறைவேறட்டும் என்று சொல்லி,**

நமக்காக, **தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்த** நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்கு சொல்வது. . .

ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். (மத்தேயு 16:24)
If anyone would come after me, he must deny himself and take up his cross and follow me. (NIV)
you must turn from your selfish ways…. (NLT)
deny himself [disregard, lose sight of, and forget himself and his own interests] (AMP)

> கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். (கலா. 5:24 ஆவியின் அடுத்து வருகிற வசனம்.)

***அப்படி நமது விருப்பத்தை சாராமல் அவரைப் பின்பற்றும்பொழுது. . .***

இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன். (ரோமர் 6:22)
But now that you have been set free from sin and have become slaves to God, the benefit you reap leads to holiness, and the result is eternal life. (NIV)

> ***நம்முடைய மாம்சத்தின் விருப்பத்தை வெறுமையாக்கி, தேவனுக்கு அடிமையாகும்பொழுது அவருடைய விருப்பத்தை நாம் நிறைவேற்றமுடியும். ஆமென்.***

**நமக்காக, மனுஷ சாயலான ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்கு சொல்வது. . .**

மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள். (எபே. 4:24)

> *(பழைய மனிதன் ஆதாமைப்போல இல்லாமல் கிறிஸ்துவுக்குள் புதிய மனிதன்)*

**நம்மை அவர். . . நம்முடைய மாம்சத்தின் ஆசைகளை வெறுத்து (அடக்கி), தேவனுக்கு அடிமையாக இருந்து, தேவனுடைய சாயலான புதிய மனுஷனை தரித்துக் கொள்ளச் சொல்கிறார்.**

***அவர் சொல்லியுள்ள இந்த கிரியைகளை நாம் நேர்த்தியாக நிறைவாக செய்வோமானால்,***

நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள் **என்றும்,**

நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் **என்றும்,**

மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.

**என்று அவர் சொல்லிய வார்த்தைகள் நிறைவேறும். அவருடைய நாமம் மகிமைப்படும்.**

அவருடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறவர்களாக இருந்து, நாம் இப்படியாக உலகத்தார்களுக்கு பிரகாசிப்போமானால். . . மக்கள் நம்மிலே கிறிஸ்துவின் சாயலை உணர்ந்து, அவரது ஜீவனுள்ள வார்த்தைகளை வாசித்து, தியானித்து அவர்களும் கிறிஸ்துவுக்குள் வருவதிலே எந்த இடலறலும் இருக்காது.
அப்படிப்பட்ட பிரயாசத்தை நாம் பிரயாசப்பட தேவனுடைய கிருபை நம்மோடு இருக்க வேண்டுவோம்.
இது மனிதனாலே மட்டும் கூடாது. நம்மோடு இருக்கிறேன் என்று சொன்ன தேவனாலே கூடும்.
மனிதனான ஆதாமினாலே கூடாதது, தேவனாகிய இயேசுகிறிஸ்துவினாலே கூடியது. ஆமென்.

இந்த லெந்து நாட்களிலே, அவருடைய பாடுகளை அதிகம் நினைக்கும் இந்த வேளையிலே, சிலுவை மரணத்தை வென்று, உயிர்த்தெழுந்து இம்மானுவேலராக நம்மோடு இருக்கிற இயேசுகிறிஸ்துவை நோக்கி நாம் அனைவரும் இப்பொழுது எழுந்து நிற்போம்.

கிறிஸ்து தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்.
அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.

கிறிஸ்துவின் கீழ்ப்படிதல், பரிபூரணப்பட்டது.
சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று. ஆமென்.

பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன். நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியைகளைச் செய்து முடித்தேன். என்று கிறிஸ்து சொல்லியதுபோல,
ஆண்டவரே நீர் எங்களுக்கு உமது வேதத்திலே சொல்லியுள்ள கிரியைகளை நாங்களும் செய்து உமது நாமத்தை இந்த பூமியிலே மகிமைப்படுத்தி உமக்கு முன்பாக நாங்கள் ஆத்துமாக்களோடு வர கிருபை செய்யும் ஆண்டவரே என்று வேண்டுவோமாக.

என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது. . .என்று சொன்ன அவர் நம்மோடு இருக்கிறார்.
அவருடைய பிரசன்னத்தோடும் அவருடைய கிருபையோடும் நம்மாலே முடியும்.
ஆலோசனையும் பெலத்தையும் அருளும் ஆவியானவரின் துணையோடு ஜெபிப்போம். ஆமென்.

Let us Pray